இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 11-07-2023

# மகளிர் மாண்பு காக்கும் முதல்வர்!

‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’ - தொடங்கப்பட இருப்பதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளர்கள். திராவிட மாடல் அரசின் மாபெரும் சமூக வளர்ச்சித் திட்டமாக இது அமைந்துள்ளது.

**பேறறிஞர் பெருந்தகை அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாளன்று இத்திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. ஒரு கோடி குடும்பத் தலைவிகள் மாதம் ஆயிரம் ரூபாய் பெறப் போகிறார்கள். ஒரு கோடி குடும்பங்களுக்கான கலைஞர் நிதி - மு.க.ஸ்டாலின் நிதி - திராவிட மாடல் அரசின் நிதி போய்ச் சேர இருக்கிறது.**

நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில்தான் - 1921 ஆம் ஆண்டு பெண்களும் வாக்களிக்கலாம் என்ற சட்ட உரிமை தரப்பட்டது. தந்தை சொத்தில் மகளுக்கும் சம உரிமை உண்டு என்ற சட்டத்தை தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் 1989 ஆம் ஆண்டு பிறப்பித்தார்கள். பணியிடங்களில் பெண்களுக்கு 30 சதவிகித இடஒதுக்கீடு தந்தவர் கலைஞர். உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு தரப்பட்டது. மகளிர் சொந்தக் காலில் நிற்கவும், அவர்கள் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றவர்களாக வலம் வரவும் மகளிர் சுய உதவிக் குழுக்களை தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கில் தொடங்கி வைத்தவர் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இப்போது ஆட்சிக்கு வந்ததும் முதலமைச்சர் அவர்கள் இட்ட முதல் கையெழுத்து என்பது மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தந்தது ஆகும். இதுவரை பலநூறு கோடி பயணங்களை பெண்கள் கட்டணமில்லாமல் மேற்கொண்டுள்ளார்கள். இந்த வரிசையில் தொடங்கப்பட்ட “புதுமைப் பெண்” என்ற திட்டமும் தொடங்கப்பட்டு, அதற்கு மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அவர்கள் பெயர் சூட்டப்பட்டது. அரசு பள்ளியில் படித்து, கல்லூரிக் கல்வியை அடையும் மாணவிகளுக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் இது. பணமில்லாமல் மகளை படிக்க வைக்கத் தயங்கும் பெற்றோரின் கவலையைத் தீர்த்துக் கொண்டிருக்கிறது இந்தத் திட்டம். இதன் மூலமாக அரசுப் பள்ளி மாணவிகளின் கல்லூரி நுழைவு அதிகம் ஆகி இருக்கிறது. அதைவிட, மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன் பள்ளிக் கல்வியை முடித்து கல்லூரிக்குப் போக முடியாமல் இருந்த மாணவிகள் இந்த ஆண்டு கல்லூரியில் சேர முன் வந்துள்ளார்கள். சமூக மாற்றம் என்பது இதுதான். இந்தத் திட்டத்தின் உண்மையான நோக்கம் இதுதான். அதில் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

அடுத்து இதோ வந்துவிட்டது... ஒட்டுமொத்த பெண் குலத்தின் விடியலான ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’!

**“தொடக்க காலத்திலிருந்தே தாய்வழிச் சமூக முறைதான், மனித குலத்தை வழிநடத்தி வந்திருக்கிறது. உழவுக் கருவிகளைக் கண்டு பிடித்து, வேளாண் சமூகமாக மாறிய போதுகூட, பெண்களின் உழைப்பு ஆண்களுக்கு நிகராகவே அமைந்திருந்தது. ஆனால், காலப்போக்கில், மதத்தின் பெயராலும், பழமையான மரபுகளின் பெயராலும், பெண்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டார்கள். அவர்களுக்குக் கல்வியறிவு மறுக்கப்பட்டது. பெண்குலத்தின் உழைப்பு நிராகரிக்கப்பட்டது. பூட்டிய இரும்புக் கூட்டின் கதவினைத் திறந்து, பெண் அடிமைத்தனத்தைத் தகர்த்து, அவர்களுக்கான சமூக, பொருளாதாரச் சுதந்திரத்தை மீட்க எத்தனையோ சமூகச் சீர்திருத்தவாதிகள் பணியாற்றினார்கள்”** என்று ஆயிரமாண்டு வரலாற்றை மிகச் சுருக்கமாகச் சொன்ன முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெண்குலத்தை முன்னேற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் வரிசைப்படுத்தினார். இருப்பினும் இன்றைய சமூக உண்மையையும் சுட்டிக்காட்ட அவர் தவறவில்லை.

**“இப்படி எண்ணற்ற திட்டங்களை மகளிருக்காக நாம் செயல்படுத்தி வந்தாலும், உலகளாவிய பாலின இடைவெளி அறிக்கையில் (Global Gender Gap Report - 2023), தரவரிசைப் படுத்தப்பட்ட 146 நாடுகளில், இந்தியா 127 - ஆவது இடத்தைப் பெற்றுள்ளது என்பதும் மிகவும் கவலைக்குரிய செய்தியாகும். இதற்கு முக்கிய காரணமாக பெண்களின் பொருளாதார நிலைமையும், கல்வி நிலையுமே உள்ளன. இந்த இரு காரணங்களில் முன்னேற்றம் காணாமல் சமூகத்திலும், குடும்பங்களிலும் மகளிர் உரிய அங்கீகாரம் பெற இயலாது.**

**இதற்காகத்தான் நமது அரசு பெண்களின் உயர்கல்வியினை இடைவெளியின்றி தொடர்ந்து பயில உதவும் வகையில், உயர் கல்வியினை நிறைவு செய்யும் காலம் வரை, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் “புதுமைப்பெண்” என்ற முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்தி அதன் மூலம் மாதந்தோறும் ஏறக்குறைய இரண்டு இலட்சம் மாணவியர் பயனடைந்து வருகிறார்கள். இந்த வரிசையில் மகளிருக்கு மகுடம் சூட்டும் வகையில், மகளிர் உரிமைத் தொகையை மாதம்தோறும் வழங்க அரசு முடிவெடுத்துள்ளது” என்று சொன்னார்கள் முதலமைச்சர் அவர்கள்.**

உலகளாவிய பாலின இடைவெளிக் குறியீட்டை உலகளாவிய பொருளாதார மன்றம் (WEF) வெளியிட்டு வருகிறது. பாலின சமத்துவத்தை உருவாக்க வேண்டுமானால் பெண்களின் பொருளாதார வளம் அதிகமாக வேண்டும். அவர்களுக்கான வாய்ப்புகள் அதிகமாக வேண்டும். அவர்களது கல்வித் திறன் அதிகரிக்க வேண்டும். உடல் நலம் சீராக வேண்டும். அவர்கள் உயிர்வாழும் காலம் அதிகமாக வேண்டும். இந்த அளவீடுகளைக் கொண்டே பாலின சமத்துவம் வரையறுக்கப்படுகிறது.

**தமிழினத் தலைவர் கலைஞரும் - திராவிட மாடல் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் உருவாக்கிக் கொடுத்த திட்டங்களின் உண்மையான முழுமையான நோக்கம் என்பது, பாலின இடைவெளியைக் குறைக்கும் திட்டங்கள் ஆகும். சரிநிகர் சமூகமாக ஆக்கிக் கொண்டு இருக்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.7.2023) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில், திராவிட இயக்க எழுத்தாளர் க.திருநாவுக்கரசு அவர்களின் மகன் சிற்றரசு மற்றும் நினைவில் வாழும் தொழிற்சங்கத் தலைவர் வி.எம்.ஆர். சபாபதி அவர்களின் பெயர்த்தி எழிலரசி ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இத்திருமண விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, கழகப் பொருளாளரும், நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வைகோ, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ.இராசா, மு. சண்முகம், கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ். பாரதி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.எஸ். இளங்கோவன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன், காங்கிரஸ் கட்சி செய்தி தொடர்பாளர் கோபண்ணா, திராவிட இயக்கத்தின் நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்கத்தின் கணினி க.திருநாவுக்கரசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல்பக்கத்தொடர்ச்சி

வெளியிட்டிருக்கிறார்கள். அதேபோல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றை முதல் மூன்று பாகங்களாக எழுதி அதனை இந்த அடியேன்தான், இதே அரங்கத்தில் வெளியிட்டு இருக்கிறேன் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதேபோல திராவிட இயக்கத்தைப் பற்றி பல நூல்கள். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், திராவிட இயக்கத்தின் வேர்கள், திராவிட இயக்கத்தின் தூண்கள், திராவிட இயக்கமும் - திராவிட நாடும், திராவிட இயக்கமும் திரைப்பட உலகமும், திராவிட இயக்க சாதனைகள், திராவிட இயக்கமும் - கலைத்துறையும், திருக்குறளும் திராவிட இயக்கமும், திராவிட இயக்கமும் - பொதுவுடைமையும் இவ்வாறு திராவிட இயக்கம் பற்றி அவர் எழுதிக் குவித்திருக்கிறார். அதனால்தான் அவரை இன்றைக்கு எல்லோரும் திராவிட இயக்கத்தின் கணினி என்று பெருமையோடு குறிப்பிட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

### 4 ஆயிரத்திற்கு மேலான கட்டுரைகளை எழுதியவர்!

தலைவர் கலைஞருடைய மூத்த பிள்ளை முரசொலி என்பதைப் பல நேரங்களில் அவரே பெருமையோடு குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட கலைஞருடைய மூத்த பிள்ளையாக விளங்கும் முரசொலியில் நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் பல ஆண்டுகளாகப் பணியாற்றி, அந்த முரசொலியை வளர்த்தெடுத்தவர்களில் ஒருவராக நம்முடைய ஐயா திருநாவுக்கரசு அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார். இன்றைக்கும் கட்டுரைகள் அவ்வப்போது வந்து கொண்டிருக்கிறது.

இதுவரை கணக்கெடுத்துப் பார்த்தீர்கள் என்றால் 4000க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியவர் நம்முடைய அண்ணன் திருநாவுக்கரசு அவர்கள்.

திராவிட இயக்கத்தையோ, தலைவர் கலைஞரைப் பற்றியோ யாராவது லேசாக விமர்சித்தால் போதும், பொறுத்துக் கொள்ள மாட்டார் அண்ணன் திருநாவுக்கரசு அவர்கள். உடனே அதற்குத் தகுந்த பதிலை, தகுந்த விமர்சனத்தை எழுதினால்தான் அவருக்கு நிம்மதி வரும். அந்த அளவிற்கு ஒரு தீவிரத்தைத் தனது மனதில் ஏற்படுத்திக் கொண்டவர். அதனால்தான் திராவிட இயக்கத்தின் தீரர் என்று இன்றைக்கு நம்மால் அவர் அழைக்கப்படுகிறார்.

### மணமகன் சிற்றரசுவும் கொள்கைப் பற்று கொண்டவர்!

அவருடைய புதல்வர் இன்றைக்கு மணக்கோலம் பூண்டிருக்கும் நம்முடைய சிற்றரசு அவர்கள், அப்பாவைப்போல ஒரு கொள்கைவாதியாக, ஒரு இலட்சியவாதியாக விளங்கிக் கொண்டிருப்பவர். அண்ணன் திருநாவுக்கரசு அவர்கள் ‘நக்கீரன்‘ என்கிற ஒரு பதிப்பகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். அதேபோல அவருடைய மகன் சிற்றரசு அவர்கள் ‘தளபதி‘ என்ற பதிப்பகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். அதன் மூலமாக 20 புத்தகங்களை அவர் வெளியிட்டு இருக்கிறார்.

அவ்வாறு வெளியிட்டிருக்கும் புத்தகங்களில் மிக முக்கியமான நூல் எது என்றால், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் வரலாற்றை திருநாவுக்கரசு அவர்கள் எழுதி நம்முடைய சிற்றரசு வெளியிட்டிருக்கிறார்கள். இதில் ஒரு சிறப்பு என்னவென்று கேட்டீர்கள் என்றால், அந்த நூல் வெளியிட்டு 3 மாத காலத்தில் 11 ஆயிரம் படிகள் விற்றுத் தீர்ந்திருக்கிறது. இதைக்கூட விமர்சனம் செய்யலாம். அப்பா எழுதிய நூலை பிள்ளை எவ்வாறு வெளியிடலாம் என்று கேட்கலாம். அதனால்தான் அய்யா ஆசிரியர் அவர்கள் தகுந்த விளக்கத்தை தந்தார்கள். இது ஒரு கொள்கைக் குடும்பம். திராவிட இயக்கத்தின் குடும்பம்.

### வாக்குறுதிகளை நிறைவேற்றி வரும் திராவிட மாடல் அரசு!

இன்றைக்கு ‘திராவிட மாடல் ஆட்சி‘ தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது. ஆட்சிப்பொறுப்பை ஏற்பதற்கு முன்பு தேர்தல் நேரத்தில் நாம் என்னென்ன உறுதிமொழிகளை - வாக்குறுதிகளைத் தந்தோமோ, அவைகள் எல்லாம் இன்றைக்கு எந்த அளவிற்கு நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம், தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

அதில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், பசியோடு பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள்

## பா.ஜ.க. தேர்தல் வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை!
## ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை - வங்கிக் கணக்கில் 15 லட்சம் எங்கே?

- மாணவ - மாணவிகள் அவர்களுக்காக ‘காலை உணவு திட்டம்’. பேருந்துகளில் மகளிர் இலவசமாகப் பயணம் செய்ய அறிவித்த அந்தத் திட்டம். பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கல்லூரியில் நுழையும் மாணவியர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை.

### மகளிருக்கு உரிமைத் தொகை அறிவிப்பு சிலருக்கு எரிச்சல், பொறாமை வருகிறது!

வருகிற செப்டம்பர் மாதம் 15-ஆம் தேதி நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்தநாள் அன்று கலைஞர் பெயரால் உருவாகியிருக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படவிருக்கிறது என்ற செய்தியையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஒரு கோடி பேர் அதைப் பெற இருக்கிறார்கள். எனவே சிலருக்கு இன்றைக்கு எரிச்சல் ஏற்பட்டிருக்கிறது. ஆத்திரம் வந்திருக்கிறது. பொறாமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் வாய்க்கு வந்தபடி எல்லாம் இன்றைக்கு விமர்சனம் செய்து கொண்டிருக்கும் சூழ்நிலை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு இந்தியாவிற்கு ஆபத்து வந்திருக்கிறது. ஆபத்து என்று சொல்வதைவிட பேராபத்து வந்திருக்கிறது. எனவே அப்படிப்பட்ட அந்த பேராபத்திலிருந்து நாம் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருந்து கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு நாம் அறிவித்திருக்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் அந்தத் திட்டங்களைப் பார்த்து விமர்சனம் செய்து கொண்டிருப்பவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்புவது, இதே பி.ஜே.பி. ஆட்சி 2014ஆம் ஆண்டு பொறுப்பேற்பதற்கு முன்னால் - தேர்தலுக்கு முன்னால் அறிவித்த உறுதிமொழிகளில் ஏதாவது ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறதா?

### தேர்தலில் அளித்த வாக்குறுதிகளை கண்டுகொள்ளாத பா.ஜ.க.!

நான் ஆட்சிக்கு வந்தால், இன்றைக்குப் பிரதமராக இருக்கும் மோடி சொன்னது, வெளிநாட்டில் இருக்கும் கருப்பு பணங்களை எல்லாம் நான் மீட்டுக் கொண்டு வந்து, அவற்றை எல்லாம் நாட்டில் இருக்கும் மக்களுக்கு ஒரு தலைக்கு - ஒரு நபருக்கு 15 லட்சம் ரூபாய் வழங்குவேன் என்று உறுதிமொழி தந்தார். பதினைந்து லட்சம் வேண்டாம், பதினைந்து ஆயிரமாவது வழங்கியிருக்கிறாரா? பதினைந்து ஆயிரம் வேண்டாம், 15 ரூபாயாவது வழங்கியிருக்கிறாரா? கிடையாது. இதுவரை அதைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை, அதைப் பற்றிக் கேட்கவே இல்லை. அதைப் பற்றி பேசவே இல்லை.

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவோம் என்றெல்லாம் உறுதிமொழி தந்தார்கள். ஆனால் அந்த உறுதிமொழிகள் எல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அதேபோல் விவசாயிகள் நலனை பாதுகாப்போம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள், இதே டெல்லி மாநகரத்தில் - இந்தியாவின் தலைநகரத்தில் விவசாயிகள் ஒன்றுகூடி மிகப்பெரிய போராட்டத்தை, ஆண்டுக் கணக்கில் நடத்தி, நூற்றுக்கணக்கான உயிரிழந்த அந்தக் கொடுமைகள் எல்லாம் நடந்தது.

### யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் அதிக கவனம் தேவை!

கடுமையான குளிரில் - கொடுமையான வெயிலில் - மழையில் - பல்வேறு சித்திரவதை ஏற்றுக் கொண்டு அந்த போராட்டத்தை நடத்தியபோது அதை பற்றி கண்டும் காணாமல் இருந்த ஆட்சி பி.ஜே.பி. ஆட்சி. அதற்குப் பிறகு வேறு வழியில்லாமல் ஓரளவிற்கு அதை ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலையை அவர்கள் பெற்றார்கள். எனவே இதையெல்லாம் உணர்ந்துதான், இப்படிப்பட்ட ஒரு மோசமான - சர்வாதிகார ஆட்சி அப்புறப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான், இன்றைக்கு இந்தியாவில் இருக்கும் எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு நல்ல முடிவை இந்திய நாட்டிற்கு ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தோடு, அண்மையில் பீகார் மாநிலத்தில் - பாட்னாவில் அங்கிருக்கும் முதலமைச்சர் நிதிஷ் குமார் அவர்கள் முயற்சியின் காரணமாக எதிர்க்கட்சிகளை சார்ந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அதில் தீர்மானங்கள் எல்லாம் வடித்தெடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரே ஒரு முக்கியம் என்ன என்று கேட்டீர்கள் என்றால், யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதைவிட, யார் ஆட்சி இருக்கக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்ற அந்த ஒரு கருத்தை அடிப்படையாக வைத்து அந்தக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது.

தொடர்ந்து வருகின்ற 17, 18 ஆகிய தேதிகளில் கர்நாடக மாநிலத்தில் - பெங்களூர் நகரத்தில் நடைபெறவிருக்கும் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### சொன்னதையெல்லாம் மறந்து பேசும் பிரதமர் மோடி!

எனவே இதையெல்லாம் பார்த்து எரிச்சல்பட்டுக் கொண்டிருக்கும் பி.ஜே.பி. ஆட்சி, குறிப்பாக அதன் தலைமைப் பொறுப்பில் இருக்கும் பிரதமர் மோடி அவர்கள், இன்றைக்கு பிரதமர் என்ற அந்த நிலையிலிருந்து மறந்து ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார்.

அதைப்பற்றி எல்லாம் நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. இதனால் எந்தச் சூழ்நிலை வந்தாலும், ஏன் ஆட்சிக்கே ஆபத்து வந்தாலும் அதைப்பற்றி இம்மியளவும் நாம் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய கொள்கை, நம்முடைய இலட்சியம் ஒரே ஒரு கொள்கையாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் மனதில் வைத்து, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை பெறுவதற்கான முயற்சிகளில் நாம் முழுமையாக ஈடுபட வேண்டும் என்று அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு நாம் இந்தக் களத்தில் இறங்கி இருக்கிறோம்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இன்றைக்கு இந்த மணவிழா நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்த மணவிழா நிகழ்ச்சியில் மணமக்களாக வீற்றிருக்கும் நம்முடைய மணமக்கள் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ்ந்திட வேண்டும்.

### மணமக்கள் தங்கள் பெயர்களைப்போல் பிறக்கும் குழந்தைக்கும் தமிழ்ப்பெயர் சூட்டுவர்!

அய்யா ஆசிரியர் அவர்கள் நினைவுபடுத்தி எடுத்துச் சொன்னார். ஒவ்வொரு திருமணவிழா நிகழ்ச்சிக்கும் நான் போகிறபோது மணமக்களுக்கு வைக்கின்ற வேண்டுகோள்தான். ஆனால் இந்த மணமக்களை பொறுத்த வரைக்கும் வேண்டுகோள் வைக்க வேண்டிய அவசியம் இல்லை. காரணம் அவர்களுடைய பெயர்களே அழகான தமிழ்ப் பெயர்கள்தான். சிற்றரசு - எழிலரசி.

நிச்சயமாக அவர்களும் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களை சூட்டுவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு நிரம்ப இருக்கிறது.

அந்த வகையில் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு, புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லியிருக்கும், “வீட்டிற்கு விளக்காய்... நாட்டிற்கு தொண்டர்களாய்” இருந்து மணமக்கள் வாழ்க... வாழ்க... வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.